**செ. கு. எண்**: 403 **நாள்**: 08.11.2012

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 8.11.2012**

---

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த மாதம் நடைபெற்ற கலப்புத் திருமணம் தொடர்பாக, நேற்று (7.11.2012) இரு வேறு பிரிவினரிடையே ஏற்பட்ட மோதலில், தர்மபுரி வட்டம், கோணங்கிநாய்கனஅள்ளி கிராமத்திற்கு உட்பட்ட நத்தம் காலனி குக்கிராமத்திலும், மற்றும் வெள்ளாளப்பட்டி கிராமத்திற்குட்பட்ட கொண்டம்பட்டி மற்றும் அண்ணாநகர் குக்கிராமங்களிலும் பல குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டு, உடைமைகள் சேதப்படுத்தப்பட்டன என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் வருத்தமுற்றேன்.

இந்த வன்முறை சம்பவத்தினையடுத்து, காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்தக் கலவரத்திற்கு காரணமானவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி காவல் துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த வன்முறை சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இந்தச் சம்பவத்தில் வீடு மற்றும் உடைமைகளை இழந்த குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா **50,000** ரூபாய் வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**